முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 26.09.2025

O.S. 128/2023

பி.வா.சா.1. ஞானப்பால்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கின் வாதி என் தம்பியின் மனைவி ஆவர். வழக்கு ஏ. பட்டிகை சொத்தான 35 ½ சென்ட் இடம் நானும் எனது தம்பி ஞானராஜனும் சேர்ந்து கிரயம் செய்தோம் என்றால் சரி, 1998 ம் வருடம் நாங்கள் இருவரும் கிரயம் வாங்கியபோது ஏ. பட்டிகை சொத்து வயக்காடாக இருந்தது என்றால் சரி ஏ. பட்டிகை சொத்து எங்கள் இருவரது அனுபவத்திலும் இருந்தது என்றால் சரி. அந்த சொத்தில் சரிபாதி கிழக்குப்பக்கம் மண் அடித்து எனது தம்பி நிலத்தை சமன் செய்தார் என்றால் தவறு. என் அனுமதி உடன் எனது தம்பி அவரது மனைவிக்கு 17 ¾ சென்ட் இடத்தை செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் தவறு.

17.06.2013 ம் தேதி பி பட்டிகை வாதியின் பெயருக்கு எனது அனுமதியுடன் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றாலும் நான் தெரிந்தே தெரியாது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள வழக்குகள் எண் 538/2011, 23/2012 ல் உள்ள சொத்துகளுக்கும் இந்த வழக்கில் உள்ள சொத்துகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்தில் எனக்கும் எனது தம்பிக்கும் சமமாக பாதி பங்கு உள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் பிரிக்கவில்லை. 21.09.2021 ம் தேதி அன்று எனது மனைவியின் பெயரில் கிரய ஒப்பந்தம் வழக்கு ஏ பட்டிகையில் உள்ள எனக்கு உரிமைப்பட்ட பிரிபடாத சொத்தை கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். உண்மையில் அந்த ஆவணம் செல்லுபடியாகாத ஆவணம் என்றாலும் வாதிகளை கஷ்டப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல.

தற்போது ஏ பட்டிகை சொத்தை சுற்றி பல வீடுகள் வந்து விட்டது என்றால் தவறு. இந்த ஏ பட்டிகை சொத்திற்கு போவதற்கு 18 அடி அகல பாதை அரசால் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நில உரிமையாளர்கள் சேர்ந்து அமைத்துள்ளோம். மேற்படி 18 அகல பாதை ஏற்படுத்துவதற்கு நான் அனுமதி கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக அனுமதிகொடுத்தேன். செலவிற்கு பணமும் கொடுத்தேன் . வழக்கு பி பட்டிகை சொத்தை வாதியும் சேர்ந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அனைத்து சொத்தையும் அனைவரும் சமமாக அனுபவித்து வருகிறோம் பாக பிரிவினை எதுவும் செய்யவில்லை.

பாதை அமைக்கும்போது ஏ பட்டிகை சொத்தை கிழக்குப்பக்கமாகவும் மேற்குப்பக்கமாகவும் பிரிக்கப்பட்டது என்றாலும் பிரிவினை செய்யப்படவில்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாதை ஏற்படுத்தும்போது என்னுடைய சொத்தில் பாதைக்கு எவ்வளவு எடுத்தார்கள் என்றால் மொத்த 35 ½ சென்ட்ல் 15 சதவீதம் பாதைக்காக கொடுத்தோம். பி பட்டிகை சொத்தில் வாதி அவருக்குரிய 15 சதவீத இடத்தை விட்டுக்கொடுத்து மீதியை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி அனுபவித்து வர கூடிய பி பட்டிகை சொத்தில் வில்லங்கத்தை ஏற்படுத்துவதற்காக எனது மனைவி பெயருக்கு கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்திற்கு பட்டா தர தீர்வை ரசீது போன்ற ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல கூட்டாக ஏ பட்டிகை சொத்தில் உள்ளது. வாதியின் பெயரில் பட்டா கர தீர்வை ரசீது இருப்பது தெரிந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரிவும் எதுவும் செய்யப்படவில்லை.

வழக்கு ஏ பட்டிகை சொத்தை பிரிக்கும் போது எனக்கு எந்த பகுதி வேண்டும் என்றால் பிரிப்பதற்கு எனக்கு உடன்பாடு இல்லை. வாதிக்கு ஒதுக்கப்பட்ட கிழக்குப்பக்க இடத்தில் அபிவிருத்தி செய்ய 5 லட்ச ரூபாய் செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு ஏ பட்டிகை சொத்து முழுவதும் நாங்கள் அனைவரும் சேர்ந்து 2010 ற்கு முன்பாகவே அபிவிருத்திக்கு செலவு செய்து பராமரிக்கிறோம். 2013 ல் தான் வாதி அபிவிருத்தி செய்தார் என்றாலும் நான் வழக்கிற்கு 2010 ற்கு முன்பு

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்தில் கிழக்குப்பக்கம் மூன்றாம் தரப்பினர் காம்பவுண்ட் சுவர் கட்டியபோது புகார் கொடுத்தற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

எனது அப்பாவிற்கு என்னுடன் சேர்ந்து மொத்தம் 9 பிள்ளைகள். நான் தான் முதல் குழந்தை. குடும்ப சொத்து சம்பந்தமாக சமரசம் செய் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் குடும்பத்தில் பிரச்சினை இல்லை. எனக்கும் வாதியின் கணவருக்கும் மட்டுமே பிரச்சினை. இதை சரிசெய்ய சமரசத்திற்கு அழைத்த போது வாதியின் கணவர் வரவில்லை. அவர் வரவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 538/2011 ல் பிரதிவாதிகள் யார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் பிரதிவாதிகளாக என்னுடன் பிறந்த சகோதரிகளும், சகோதரர்களும் உள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.